பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

03 07 2024 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நீட் தேர்வு வினாத்தாள் வெளியான விவகாரத்தில் தொடர்புடையவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி உறுதிபட தெரிவித்துள்ளார்.
- உத்திரபிரதேச மாநிலம் ஹத்ராஸ் மாவட்டத்தில் ஆன்மீக நிகழ்ச்சியில் நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 116-ஆக அதிகரித்துள்ளது.
- தமிழகத்தில் குறுவை, சம்பா பருவ பயிர்களை பிரதமரின் பயிர்க் காப்பீட்டு திட்டத்தில் இம்மாதம் 31-ஆம் தேதிக்குள் விவசாயிகள் காப்பீடு செய்து கொள்ளுமாறு மாநில அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் கேட்டுக் கொண்டுள்ளார்.
- விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் கருத்துக் கணிப்புகளை வாக்குப்பதிவு முடிவடையும் வரை ஊடகங்கள் வெளியிட தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது.
- விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் முன்னணி வீரர் நோவக் ஜோக்கோவீச் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

இளநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வு வினாத்தாள் வெளியான விவகாரத்தில் தொடர்புடையவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி உறுதிபட தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்று குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அவர், இந்த விஷயத்தில் அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறினார்.

நீட் தேர்வு பிரச்சினை தொடர்பாக நாடு முழுவதும் பலர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இதுபோன்ற குற்றங்களை தடுக்க வலுவான சட்டத்தை அரசு ஏற்கனவே கொண்டு வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்க வாய்ப்பு அளித்துள்ள மக்கள், எதிர்க்கட்சியான காங்கிரஸூக்கு 100 இடங்களைக்கூட வழங்கவில்லை என்று பிரதமர் குறிப்பிட்டார்.

அரசின் கொள்கைகள் மீது நம்பிக்கை வைத்து மக்கள் இந்த வாய்ப்பை வழங்கி இருப்பதாகவும், நாட்டிற்கு முன்னுரிமை என்ற கொள்கையுடன தமது அரசு செயல்படுவதாகவும் அவர் கூறினார்.

அரசியல் சாசன சட்டம் மற்றும் இடஒதுக்கீடு குறித்து காங்கிரஸ் கட்சி மக்களவைத் தேர்தலின்போது தவறான தகவலை மக்களிடையே பரப்பியதாகவும், ஆனால் மக்கள் அவற்றை நம்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களவைத் தேர்தலுடன் நடைபெற்ற நான்கு மாநில சட்டமன்ற தேர்தல்களிலும் தேசிய ஜனநாயகக் கூட்டணியே வெற்றிபெற்றிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதமரின் பதிலுரையின்போது எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டு இடையூறு செய்ததற்கு கண்டனம் தெரிவிக்கும் தீர்மானத்தை மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் முன்மொழிந்தார்.

உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா வழிமொழிந்த அந்த தீர்மானம் அவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

பிரதமரின் பதிலுரையைத் தொடர்ந்து மக்களவை மறுதேதி குறிப்பிடாமல் நேற்று ஒத்தி வைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் நேற்று குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றது. பல்வேறு கட்சி உறுப்பினர்கள் இதில் பங்கேற்று பேசினர்.

**[]<<<>>>[]**

மக்களவையில் பிரதமர் திரு நரேந்திரமோடியின் பதிலுரையின்போது எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி நடந்து கொண்ட விதம் கண்டிக்கத்தக்கது என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ குற்றம்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய அவர், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு காங்கிரஸ் கட்சிக்கு மூன்று மணி நேரம் 48 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டதாகக் .கூறினார்.

மணிப்பூரைச் சேர்ந்த ஒரு உறுப்பினருக்கு நேற்று விவாதத்தில் பேச அனுமதி வழங்கியபோதிலும், காங்கிரஸ் கட்சி வேண்டுமென்றே மணிப்பூர் உறுப்பினரை பேசுவதற்கு அனுமதிக்கவில்லை என்று அவர் குற்றம்சாட்டினார்.

பிரதமரின் உரையை உறுப்பினர்கள் கேட்கவிடாமல் காங்கிரஸ் கட்சி தொடர்ந்து கூச்சலில் ஈடுபட்டதாகவும், அதற்கு கண்டனம் தெரிவிப்பதாகவும் திரு கிரண் ரிஜிஜு கூறினார்.

**[]<<<>>>[]**

உத்திரபிரதேச மாநிலம் ஹத்ராஸ் மாவட்டத்தில் ஆன்மீக் நிகழ்ச்சி ஒன்றில் நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 116-ஆக அதிகரித்துள்ளது.

ஹத்ராஸ் மாவட்டம் ரதிபன்பூர் கிராமத்தில் ஆன்மீக சொற்பொழிவு நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் ஒரே நேரத்தில் வெளியேறியதால் ஏற்பட்ட நெரிசல் காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டதாக அம்மாநில தலைமைச் செயலாளர் திரு மனோஜ் குமார் சிங் கூறியுள்ளார்.

ஏராளமானோர் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து மீட்புப் பணிகள் குறித்து முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் உயரதிகாரிகளுடன் அவசர ஆலோசனை நடத்தினார்.

விபத்து நேரிட்ட பகுதிக்கு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை அனுப்பியதுடன், நிலைமை குறித்து கேட்டறிந்தார்.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்த ஆக்ரா கூடுதல் காவல்துறை தலைவர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், 24 மணி நேரத்தில் அறிக்கை அளிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதகாவும் உத்திரபிரதேச அரசு தெரிவித்துள்ளது.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல்துறை தலைமை இயக்குநர் திரு பிரசாந்த் குமார் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திரமோடி, எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உத்திரபிரதேச முதலமைச்சருடன் பிரதமர் திரு நரேந்திரமோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்த சம்பவம் குறித்து கேட்டறிந்தார்.

மாநில அரசுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு அளிக்கும் என்று அப்போது பிரதமர் உறுதியளித்தார்.

**[]<<<>>>[]**

நடப்பு ஆண்டில் குறுவை, சம்பா கோடை பருவங்களில் பிரதமரின் பயிர்க் காப்பீட்டு திட்டத்தின் கீழ் விவசாயிகள் உடனடியாக காப்பீடு செய்ய முன்வர வேண்டுமென்று மாநில வேளாண்துறை அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதன்படி இம்மாதம் 31-ஆம் தேதிக்குள் விவசாயிகள் தங்களது பயிர்களை காப்பீடு செய்து கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

முன்மொழிவு விண்ணப்பத்துடன் விவசாயிகள் தங்களது அடையாள சான்று உள்ளிட்டவற்றை இணைத்து விண்ணப்பிக்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நடப்பு ஆண்டுக்கான மாநில அரசின் வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் இத்திட்டத்திற்காக ஆயிரத்து 775 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழுக்கும், தமிழ்மொழி பண்பாட்டு வளர்ச்சிக்கும் தொண்டாற்றி வரும் தமிழறிஞர்களுக்கு திருவள்ளுவர் விருது உட்பட 73 விருதுகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மாநில அரசு அறிவித்துள்ளது.

அடுத்த ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது மற்றும் இந்த ஆண்டிற்கான மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது உள்ளிட்ட 72 விருதுகளுக்கு தகுதியுடைய தமிழறிஞர்கள் விண்ணப்பிக்கலாம் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதற்கான விண்ணப்பங்களை தமிழ் வளர்ச்சித் துறையின் இணையதளம் மூலமாகவும், விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்தும் அடுத்த மாதம் 15-ஆம் தேதிக்குள் சென்னை எழும்பூர் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பலாம் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் தொடர்பான வாக்குப்பதிவுக்கு பிந்தைய எந்த ஒரு கருத்துக் கணிப்பையும் ஊடகங்கள் வெளியிட தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது.

மக்கள் பிரதிநிதித்துவ சட்ட விதிகளின்படி, வாக்குப்பதிவு நடைபெறும் நாளான வரும் பத்தாம் தேதி காலை ஏழு மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை அது தொடர்பான கணிப்புகளை வெளியிடுவது தண்டனைக்குறிய குற்றம் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரதா சாஹூ அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களயைும், அவர்களது படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சரை, அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர் கதையாக உள்ளது என்றும், கச்சத்தீவை மீட்பது ஒன்றே இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கத்தை தடுக்க மாநில அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

**[]<<<>>>[]**

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்களை மத்திய அரசு விரைந்து மீட்டு வருவதாக பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் கச்சத்தீவு விவகாரம் தொடர்பாக மீண்டும் தவறான தகவல்களை தெரிவித்திருப்பதை சுட்டிக்காட்டினார்.

தாம் எழுதிய கடிதத்தில் கச்சத்தீவை கண்டிப்பாக மீட்டுக் கொண்டுவர வேண்டும் என்பதை வலியுறுத்தி இருப்பதாகவும் திரு அண்ணாமலை கூறினார்.

**[]<<<>>>[]**

விண்வெளியில் 2033-ஆம் ஆண்டுக்குள் ரஷ்யா புதிய மையத்தை அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது.

**[]<<<>>>[]**

நெதர்லாந்து புதிய பிரதமராக பொறுப்பேற்றுள்ள **Dicks choof** -க்கு பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கஜகஸ்தான் தலைநகர் அஸ்தானா சென்றடைந்தார்.

**[]<<<>>>[]**

இலங்கையின் மன்னாரில் உள்ள வழிபாட்டுத் தலத்தில் இந்திய நிதி உதவியுடன் விடுதிகள் கட்டுவதற்கு கூடுதல் நிதி ஒதுக்குவதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

ஜம்மு-கஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா மொகரம் பண்டிகை முன்னேற்பாடுகள் குறித்து நேற்று ஸ்ரீநகரில் ஆய்வு மேற்கொண்டார்.

[]<<<>>>[]

சத்திஷ்கர் மாநிலம் நாராயண்பூர் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் ஐந்து மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

[]<<<>>>[]

திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள கரும்பு விவசாயிகள் இம்மாதம் 15-ஆம் தேதிக்குள் கரும்பு சாகுபடி பரப்பினை பதிவு செய்யுமாறு ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

தருமபுரி மாவட்டத்தில் வரும் ஒன்பதாம் தேதி தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட உள்ளதாக ஆட்சியர் திருமதி சாந்தி தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

கள்ளக்குறிச்சி மற்றும் சங்கராபுரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் நேரில் ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

காஞ்சிபுரம் மாவட்டத்தில் முதல்வர் திட்ட சிறப்பு முகாம்களில் மனுக்களை பெறும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

ராமநாதபுரத்தில் இயற்கை உரம் உற்பத்தி செய்யும் ஆய்வகத்தை மாவட்ட ஆட்சியர் திரு விஷ்ணு சந்திரன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**[]<<<>>>[]**

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் முன்னணி வீரர் நோவக் ஜோக்கோவிச் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

லண்டனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் செக்குடியரசின் **Vit kopriva** 6-3, 6-2, 6-2 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.

**[]<<<>>>[]**